# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8073084

C

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் ஊ.த.க Year ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 2/19 Date நாள் 28.01.2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: by PC Act 2018 Sections பிரிவுகள்: 7 of PC Act.
   (iii) Act சட்டம்: (Amendment) Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period நேர அளவு : 02.01.2019 Time from : நேரம் முதல் 1230 hrs Time to : நேரம் வரை 17.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.01.2019 Time : நேரம் 19.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 500 மீட்டர் வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அலுவலகம், விழுப்புரம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. அமுதா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி
   துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   மருத்துவர். பெ. பாலுசாமி, MBBS., DPH, DIH., த/பெ பெரியசாமி, துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், விழுப்புரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   சட்டக் கருத்துரை பெற வேண்டியிருந்ததால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. 02.01.2019 ந்தேதி மாலை 19.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திருமதி.அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.ந.க.எண்:அ/4/2019, நாள்:02.01.2019அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரபணிகள் அலுவலகம் - 02.01.2019 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:02.01.2019. இன்று எனக்கு 02.01.2019 ந்தேதி காலை 12.00 மணிக்கு கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரியும் அ.அமுதா ஆகிய நான் எனது அலுவலகமான விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, எனக்கு விழுப்புரம் நகரம் திருச்சி to சென்னை மெயின்ரோட்டில் மேற்கு நோக்கி அமைந்துள்ள தாட்கோ கட்டிடத்தின் 2வது தளத்தில் அமைந்துள்ள துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அலுவலகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்துவரும் மருத்துவர் பெ.பாலுச்சாமி, MBBS., DPH., DIH., என்பவர் தனக்கு கீழ் பணிபுரியும் பணியாளர்களிடம் இருந்து புத்தாண்டு பரிசு என்ற பெயரில் பணம் மற்றும் பரிசு பொருட்கள் மற்றும் லஞ்சமாக பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சுமார் 12.30 மணிக்கு சென்று அங்கு காவல் ஆய்வளர் அவர்களுடன் எனக்கு கிடைத்த விபரத்தை கூறி மேற்படி

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......—........... Rank ........—......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...........—...........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு FIR Send to Complainant through SP messenger

2/1/19
Signature of the Officer in Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. சதீஷ்,
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ..........
ஊ.த.க பிரிவு,
விழுப்புரம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்தேன். பின்பு நான், காவல் ஆய்வாளர் திரு.M.சதீஷ் மற்றும் காவல் குழுவினருடன் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அவர்கள் அலுவலக அறைக்கு சென்றபோது அறையில் பெ.பாலுச்சாமி, துணை இயக்குநர், சுகாதரப்பணிகள் அவர்கள் தனது இருக்கையில் அமர்ந்திருந்தார். அப்போது அவரை புத்தாண்டை ஒட்டி பார்க்கவந்த சுமார் 20 நபர்கள் இருந்தார்கள். துணை இயக்குநர் மற்றும் அங்கிருந்தவர்களிடம் நான் என்னையும் மற்றும் ஆய்வாளரையும் அறிமுகம் செய்து வைத்து பின்னர் அவரது அறையை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்து எனது தலைமையில் மேற்படி மருத்துவர் பெ.பாலுச்சாமி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் விழுப்புரம் அவர்களை விசாரணை செய்ததில் தனது பெயர் பெ.பாலுச்சாமி, MBBS., DPH., DIH., தந்தை பெயர் பெரியசாமி நெ3/7 மாரியம்மன் கோயில் வீதி, ஆப்பகூடல் புதுப்பளையம், சக்திநகர் அஞ்சல், பவாணி வட்டம், ஈரோடு மாவட்டம் என்றும் தனது மேற்பார்வையில் 54 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் இரண்டு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளது என்றும் மேற்படி 54 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் அனைத்து ஆளிநர்களும் எனது மேற்பார்வையின் கீழ்தான் பணிபுரிந்து வருகிறார்கள் என தெரிவித்தார். பின்னர் மருத்துவர் திரு.பாலுசாமி முன்னிலையில் 13.00 மணிக்கு திடீராய்வு செய்யத்தொடங்கினோம். மேற்படி அறை கிழக்கு நோக்கி இருக்கையில் அமர்ந்திருந்த மருத்துவர் பாலுச்சாமி அவர்கள் முன்பிருந்த மேஜையினை ஆய்வு செய்தபோது அதில் ஒரு தங்ககாசும், ஒரு வெள்ளி விநாயகர் சிலையும் இருந்தன. பின்னர் அவரை ஆய்வாளர் உதவியுடன் நான் சோதனை செய்தபோது அவரிடம் 20 X 500 = 10,000/- இருந்தன. இதற்கான விளக்கம் கேட்டபோது மேற்படி சரிவர சொல்லாததால் மேற்படி பணம் ரூ.10,000/-த்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் நான் அருகில் இருந்த ஆய்வாளரிடம் மேற்படி தங்ககாசு மற்றும் வெள்ளி விநாயகர் சிலை ஆகியவற்றின் உண்மைத்தன்மை மற்றும் அதனுடைய எடையினை தெரிந்து பதிவு செய்வதற்காக உடனடியாக நகைமதிப்பீட்டாளரை அழைத்து வருமாறு கேட்டுக்கொண்டேன். பின்னர் ஆய்வாளர் சதீஷ் அருகில் இருந்த காவலரிடம் நகை மதிப்பீட்டாளர் தொடர்பான தகவல் கொடுத்து வரவழைக்க உத்தரவிட்டார். பின்னர் நான் அறையில் இருந்த நபர்களை விசாரணை செய்து அவர்கள் தன்னிச்சையாக அவர்களிடம் இருந்த பணத்தினை ஆஜர் செய்தனர். அதன் விபரம்.

| வ.எண் | பெயர், பதவி மற்றும் விலாசம் | சோதனையின் போது ஆஜர் செய்த தொகை | பரிசு பொருள் |
| --- | --- | --- | --- |
| 1. | திரு.கு.பழனி குமார்,<br>த/பெ குப்புசாமி,<br>கண்மருத்துவ உதவியாளர்,<br>ஆரம்ப சுகாதார நிலையம்,<br>ஒலக்கூர். | 5,500/- | தங்க காசு ஒன்று |
| 2. | திரு.கா.குமார்,<br>த/பெ. காசிப்பிள்ளை<br>கண்மருத்துவ உதவியாளர்,<br>ஆரம்ப சுகாதார நிலையம்,<br>முருக்கேரி. | 4,500/- | |
| 3. | திரு.மே.அசோக்குமார்,<br>த/பெ மேகநாதன், தட்டச்சர்,<br>மாவட்ட பார்வையிழப்பு தடுப்பு சங்கம்,<br>முண்டியம்பாக்கம்<br>அரசு மருத்துவமனை,<br>விழுப்புரம். | 4,000/- | |

| | | | |
|---|---|---|---|
| 4. | திரு.க.ரவிச்சந்திரன்,<br>த/பெ கன்னையன்,<br>மருத்துவர்,<br>அரசு மருத்துவமனை,<br>திண்டிவனம். | 3,000/- | |
| 5. | திருமதி. ர.வளர்மதி,<br>க/பெ ரவி,<br>கண்மருத்துவ உதவியாளர்,<br>ஆரம்ப சுகாதார நிலையம்,<br>ராதாபுரம். | 5,900/- | |
| 6. | திரு.B.மகபூப்பாஷா,<br>த/பெ பாஷூ சாகிப்,<br>மாவட்ட நலக் கல்வியாளர், காசநோய்,<br>விழுப்பாம். | 31,500/- | |
| 7. | பா.ஜனநாயகன்,<br>த/பெ பாக்கியராஜ்,<br>உதவியாளர்,<br>சுகாதார மனதவள மேம்பாட்டு நிறுவனம்(HDMI), விழுப்புரம். | 4,600/- | |
| 8. | மா. சிவசங்கர்,<br>த/பெ மாசிலாமணி,<br>சுகாதார ஆய்வாளர்,<br>மாவட்ட துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம், விழுப்புரம். | 5,000/- | |
| 9. | திரு.ஆ.பெஞ்சமின்,<br>த/பெ.ஆரோக்கியசாமி,<br>கண்காணிப்பாளர்,<br>ஆரம்ப சுகாதாரநிலையம், கிளியனூர். | 5,000/- | |
| 10. | திரு.அ.ஜோசப்ராஜ்குமார்,<br>த/பெ.அன்பழகன்,<br>உதவியாளர்,<br>ஆரம்ப சுகாதார நிலையம், ராதாபுரம், | 6,000/- | |
| 11. | திரு.கி.உதயகுமார்,<br>த/பெ கிருஷ்ணன்,<br>ஓட்டுநர்,<br>மாவட்ட துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம், விழுப்புரம். | 1,500/- | |
| 12. | திரு.பா.கோபிநாத்,<br>த/பெ பாலசுப்ரமணியன்,<br>கணக்கு உதவியாளர் (தற்காலிகம்)<br>மாவட்ட துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம், விழுப்புரம். | 14,500/- | |
| | மொத்தம் | 91,000/- | |

எனவே மேற்கண்ட திடீராய்வு சோதனையில் இரண்டு தங்ககாசு மற்றும் துணை இயக்குநர் திரு.பாலுசாமி மற்றும் மேற்கண்ட 12 நபர்களிடம் இருந்து கணக்கில் வராத 10,000 + 91,000 = 1,01,000 கைப்பற்றப்பட்டது. எனது அறிவுரைப்படி அலுவலகத்தில் ஆஜரான திரு.K.சுந்தரேசன் நகை மதிப்பீட்டாளர், Bank of Broda, Viluppuram என்பவர் உதவியுடன் திரு.பாலுச்சாமி துணைஇயக்குநர், சுகாதாரப்பணிகள் அவர்களுடைய மேசையின் மேல் இருந்து கைப்பற்றப்பட்ட மேலே கண்ட தங்ககாசை மதிப்பீடு செய்ய 10 கிராம் தங்கநாணயம் இருப்பதாக தெரியவந்தது. அதே மேசையில் இருந்த வெள்ளி விநாயகர் சிலையை மதிப்பீடு செய்ய அந்த சிலை 26 கிராம் எடை கொண்டதாக இருந்தது. பின்னர் பழனிகுமார் த/பெ குப்புசாமி என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்க நாணயத்தை மதிப்பீடு செய்ததில் இரண்டு கிராம் எடை இருந்தது. மேற்படி 12 கிராம் எடை கொண்ட இரண்டு தங்க காசுகளையும், 26 கிராம் எடை கொண்ட வெள்ளி விநாயகர் சிலையையும் மேல் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் மேற்படி DDH அலுவலக அறை ஒட்டிய பார்வையாளர் காத்திருப்பு அறையில் இருந்த மர கப்போர்டில் இருந்து பழங்கள் மற்றும் கேக் இருந்த கலர்ஸ் என்ற பெயரிட்ட கட்ட பையினை சோதனை செய்ய அதில் தனித்தனியாக 5 நகை பெட்டியில் 5 தங்க காசுகளும், 30 செ.மீ உயரம் கொண்ட ஒரு வெள்ளி வேல் இருந்தது. அதனை மருத்துவர் பெ.பாலுசாமி, ஆய்வாளர் முன்னிலையில் நகைமதிப்பீட்டாளர் உதவியுடன் மதிப்பீடு செய்ததில் ஐந்து தங்ககாசுகளும் தலா 2 கிராம் வீதம் 10 இருந்தது. வெள்ளி வேல்-ஐ மதிப்பீடுசெய்ய அது 92 கிராம் எடை இருந்தது. மேற்படி ஐந்து தங்ககாசுகள் மற்றும் வெள்ளி வேலையும் மேல் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பிறகு துணை இயக்குநர் திரு.பாலுசாமி மற்றும் மேலே கண்ட 12 நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திடீராய்வு சோதனை 17.30 மணிக்கு முடிக்கப்பட்டது.மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக நான் கொடுத்த புகாரின் பேரில் திரு.பெ.பாலுசாமி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், விழுப்புரம் என்பவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், இணைப்பு: 1.திடீர் ஆய்வு மகஜர் 2.ரொக்கம் ரூபாய் 10,1000/- மற்றும் இதர ஆவணங்கள் 3.7 தங்க காசுகள் 4.வெள்ளி விநாயகர் சிலை-1 மற்றும் வெள்ளி வேல்-1

அம்மா, நான் இன்று 28.01.2019 மாலை 17.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனு தொடர்பாக சட்டக்கருத்துரை பெற்று விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண்.02/2019 u/s 7 P.C. Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

(M.சதீஷ்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.